10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
## Ethiroli

குரல் 01 அதிர்வு 126 சனிக்கிழமை செப்ரெம்பர் 23 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## இடைக்கால அறிக்கை முற்போக்கானது



"புதிய அரசியலமைப்பொன்றின் உருவாக்கத்துக்கான வழிநடத்தல் குழுவின் பிரதான அறிக்கையை முற்போக்கானதாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பார்க்கின்றது" எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், வழிநடத்தல் குழுவின் உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இரண்டு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அவ்வறிக்கைக்கு இணக்கம் தெரிவிக்கும் பட்சத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனது இணக்கத்தை வழங்குவது குறித்து பரிசீலிக்கும் என்றும், அவர் தெரிவித்தார். வழிநடத்தல் குழுவின் பிரதான அறிக்கை குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்த அவர்,

"புதிய அரசியலமைப்பொன்றின் உருவாக்கத்துக்கான, வழிநடத்தல் குழுவின் பிரதான அறிக்கையில் முதலில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் தொடர்பில் பல கட்சிகள் பின்னர் மாறுபாடான கருத்துக்களை முன்வைத்துமுள்ளன. அனேக கட்சிகள் தாம் முன்னர் இணங்கியவற்றில் இருந்து மாறுபட்டதாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனது கொள்கை சார்ந்த விடயங்களில் சில

06



# அம்பாந்தோட்டை பூகோள மையமாகும்

### சீனா நம்பிக்கை

பூகோளக் கடல்சார் மையமாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைக் கட்டியெழுப்புவதே, தமது நோக்கம் என்று சீனாவின் மேர்ச்சன்ட் போர்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தைக் கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்வது தொடர்பாக, சீனாவின் மேர்ச்சன்ட் போர்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனம் கடந்த ஜூலை மாதம், இலங்கைத் துறைமுக அதிகார சபையுடன் உடன்பாடு செய்து கொண்டது. இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் மிகப்பெரிய நேரடி வெளிநாட்டு முதலீட்டுத் திட்டம் இதுவாகும். கொழும்பில் நேற்று இலங்கை வர்த்தக சம்மேளனத்தில் அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்பாடு குறித்து, சீனாவின் மேர்ச்சன்ட் போர்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் பிரதி பொது முகாமையாளர் ஹங் தியன் தெளிவுபடுத்தினார். "அண்டை நாடுகளையும் உலகின் ஏனைய பகுதிகளையும் இணைக்கும் ஒரு பிரதான மையமாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை மாற்றுவதற்கு நாம் இலக்கு வைத்துள்ளோம். இது இலங்கையின் தேசிய நோக்கு. இதனைச் செயற்படுத்தும் பணியே எம்முடையது. இலங்கையின் நோக்கிற்கு பங்களிப்பதே எமது நோக்கம். எம்மால் புதிய முதலீட்டை, புதிய முகாமைத்துவ முறைமையை, சீன மேர்சன்ட் போர்ட்ஸ் நிறுவனத்தின் பூகோள வலையமைப்பின் மூலம், புதிய தொழில்நுட்பத்தைக் கொண்டு வரமுடியும்.

06



# அவசரப்பட்டால் காரியம் கெட்டுவிடும்

**ஹுசைனை சந்தித்த மைத்திரி விளக்கம்**

மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகள் படிப்படியாக முன்னேற்றமடைந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவசரப்பட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் கடும் போக்காளர்களே இலாபமடைவதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் ஷெயிட் அல் ஹுசைனிடம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் ஷெயிட் அல் ஹுசைனுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குமிடையிலான சந்திப்பு நேற்று இரவு நியூயோர்க்கில் நடைபெற்றது. அதன்போது இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகள் குறித்து இருவரும் கலந்துரையாடினர். அங்கு குறிப்பிட்ட ஜனாதிபதி, இலங்கை, ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடு என்ற வகையில் அதன் உடன்படிக்கைகளுக்கு ஏற்ப, மக்களின் நலனுக்காக மிகவும் பொறுப்புடன் செயற்பட்டு வருகிறது. மனித உரிமைகள் பேரவை

06

## பாதுகாப்புச் செயலருடன் நெதர்லாந்துத் தூதுவர் சந்திப்பு



இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் திருமதி ஜொன்னே தூர்னேவாத் பாதுகாப்புச் செயலாளர் கபில வைத்தியரத்னவைச் சந்தித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது நெதர்லாந்து தூதுவர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கிடையில் சிநேகபூர்வ கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னங்களும் இதன்போது பரிமாறிக் கொள்ளப்பட்டன. (உ)

## தண்டிக்கும் நாடுகள் பட்டியலில் இலங்கை

மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்களைத் தண்டிக்கும் நாடுகள் பட்டியலில் 14 ஆவது இடம் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு, மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்களை தண்டிக்கும் 21 நாடுகளின் பட்டியலை நேற்று வெளியிட்டுள்ளது.

மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்களைத் தண்டிக்கும் நாடுகள் பட்டியலில் இலங்கை சேர்க்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

06

## ரணிலின் கருத்து அதிர்ச்சியளிக்கிறது

பலாத்காரமாக காணாமல் ஆக்கப்படுவதிலிருந்து அனைவரையும் பாதுகாப்பது சம்பந்தமாக இலங்கையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச உடன்படிக்கையானது எதிர்காலத்துக்கு மட்டுமே செல்லுபடியானது என்றும் அது இறந்த காலத்திற்கானதல்ல என்றும் அது இந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தின் பின்னரே செல்லுபடியாகும் எனவும் பிரதமர்

06

## யாழில் 9 சாரதிகளின் அனுமதிப் பத்திரங்கள்
# இடைநிறுத்தம்

மதுபோதையில் வாகனங்களைச் செலுத்திய 9 பேரின் சாரதி அனுமதிப்பத்திரங்கள் 6 மாதங்களுக்கு இடைநிறுத்திவைக்க யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது. யாழ். நகரில் அண்மைக்காலத்தில் அதிகரித்துள்ள குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு நகரப் பகுதியில் சிறப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர். அதன்போதே மதுபோதையில் மோட்டார் வாகனங்களைச் செலுத்திய 9 சாரதிகள் பொலிஸாரிடம் மாட்டினர்.

அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். 9 பேருக்கும் எதிராகத் தனித்தனியே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

06

# வடக்கு ரயில் சேவை பாதிப்பு



கோட்டையிலிருந்து குருநாகல் நோக்கிப் பணித்துக்கொண்டிருந்த ரயில், பொல்ஹாவலையில் தடம்புரண்டமையால், வடக்குக்கான ரயில் சேவைகள் யாவும் பாதிப்படைந்துள்ளன என்று ரயில்வே கட்டுப்பாட்டறை அறிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தால் நேற்று இரவு ரயில் சேவைகள் பாதிப்படைந்திருந்தன. இன்று காலை 6 மணிக்கு யாழ்ப்பாணம் வர வேண்டியிருந்த ரயில் காலை 09.30 மணிக்கே வந்து சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)



# பொலிஸ் காவலரண் திறப்பு

குறிகட்டுவானில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் காவலரண் ஒன்று நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்குமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரொஷான் பெர்னான்டோ, யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலித பெர்னான்டோ, யாழ்.மாவட்ட சிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரெலசின்லஸ், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (உ)

# ஒன்றரை இலட்சம் பேருக்கு வெளிநாட்டில் வேலை

கடந்த எட்டு மாதங்களில், இலங்கையர், 141,000இற்கும் மேற்பட்ட இலங்கையர், வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புத்தேடிச் சென்றுள்ளனர் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

அதில், பெண்கள் 48,374 பேரும், ஆண்கள் 93,351 பேரும் அடங்குகின்றனர். ஆகக் கூடுதலாக, 42,389 பேர் மேல் மாகாணத்திலிருந்தே சென்றுள்ளனர். குறைவாக ஊவா மாகாணத்திலிருந்து 3,994 பேர் சென்றுள்ளனர்.

இக்காலப்பகுதிக்குள் வீட்டுப் பணிப் பெண்களாக,37,002 பேர் பயணித்துள்ளனர் என்றும் அந்தப் பணியகம் தெரிவித்துள்ளது. (உ)



# அனுமதியற்ற சொகுசு வாகன இறக்குமதி குறித்து விசாரணை

அனுமதியின்றிச் சொகுசு வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக அபிவிருத்தி மூலோபாய மற்றும் சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சு விஷேட விசாரணையை ஆரம்பித்துள்ளது.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் சம்பந்தமாக இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

தற்போதிருக்கின்ற சட்ட விதிகளுக்கு மாறாக 30 சொகுசு கார்களை இறக்குமதி செய்வதற்கு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதி அமைச்சர அல்லது பிரதியமைச்சரின் ஆலோசனைப்படியே வழங்க முடியும் என்ற போதிலும், இது தொடர்பில் உரிய அமைச்சர்களிடம் ஆலோசனை பெறப்படவில்லை என்றும் தெரியவந்துள்ளது. (உ)

# கீதா வீட்டில் காஸ் வெடிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்ஹவின் வீட்டில் காஸ் சிலிண்டர் வெடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது மெய்ப்பாதுகாவலரான அமைச்சர் பாதுகாப்புப் பிரிவின் அதிகாரி மற்றும் தன்னுடைய சாரதியின் அலட்சியப் போக்கின் காரணமாகவே, தன்னுடைய வீட்டிலிருந்த காஸ் வெடித்தது என்று, நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்ஹ குற்றஞ்சாட்டியுள்ளார். (உ)

# படையினர் இரத்ததானம்

விஜயபாகு படையணியின் 29ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வல்வெட்டித்துறை நெடிய காட்டில் இரத்ததான நிகழ்வு நடைபெற்றது. இரத்ததான நிகழ்வில் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் என சுமார் 150 பேர் இரத்ததானம் வழங்கினர். (உ)




# மிருகக்காட்சிச் சாலைக்கு இரவிலும் போகலாம்



தெஹிவளை மிருகக்காட்சிச் சாலை வாரத்தின் மூன்று நாட்கள் இரவு வேளைகளில் பொது மக்களின் பார்வைக்காக திறக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தியோகபூர்வ வைபவத்தை வலுவாதார அபிவிருத்தி, வனஜீவராசிகள் மற்றும் புத்த சாசன அமைச்சருமான காமினி ஜயவிக்கரம பெரேரா ஆரம்பித்து வைத்தார்.

பெரும்பாலானோரின் வேண்டுகோளுக்கிணங்க வெள்ளி, சனி ,ஞாயிறு ஆகிய மூன்று நாட்களில் இரவு வேளைகளில் 7 மணி முதல் 10 மணிவரை இந்த மிருகக் காட்சிசாலை பொது மக்களின் பார்வைக்காக திறக்கப்பட்டுள்ளது.

இரவுவேளைகளில் மிருகக்காட்சிச்சாலைக்கு வருவோர் பிளாஸ் ஒளியூட்டச் செய்து புகைப்படம் எடுத்தல் தடை செய்யப்பட்டுள்ளது. (உ)

# பரோல் நீடிப்பு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட பேரறிவாளனுக்கு, மேலும் ஒரு மாத காலம், சிறை விடுப்பு நீட்டித்து, தமிழக அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



ராஜீவ் காந்தி கொலை வழக்கில், கடந்த 26 ஆண்டுகளுக்கு மேல், தண்டனை பெற்ற பேரறிவாளனை, பரோலில் விடுவிக்க வேண்டும் என்று, அவரது தாய் அற்புதம்மாள் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதன் பேரில், அவர் ஒகஸ்ட் 24ஆம் திகதி முதல், ஒரு மாத காலம் சிறை விடுவிப்பில் விடுவிக்கப்பட்டார். நாளையுடன் அவரது பரோல் காலம் முடிவடைய இருந்தது.

இதைத் தொடர்ந்து, அவரது தந்தைக்கு, மேலும் இரு அறுவை சிகிச்சைகள் செய்ய வேண்டியுள்ளதால், பேரறிவாளனின்சிறை விடுப்பை, மேலும் நீடிக்க வேண்டும் என்று, தாய் அற்புதம்மாள், தமிழக அரசாங்கத்துக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

இந்நிலையில், பேரறிவாளனுக்கு மேலும் ஒரு மாதம் பரோலை நீடித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (உ)

# மட்டக்களப்பில் 8 பேர் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தில் மதுவரி உத்தியோகத்தர்களால் நேற்று மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது, கசிப்பு உற்பத்தி செய்தல், சாராயம் விற்பனை செய்தல் உள்ளிட்ட சட்ட விரோத செயல்களுடன் தொடர்புபட்ட 8 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மதுவரி ஆணையாளர் கே.எம். ஜி.பண்டாரவின் பணிப்புரைக்கமைய கிரான், கொக்கட்டிச்சோலை, வாகரை, ஆரையம்பதி, ஏறாவூர் ஆகிய இடங்களிலேயே, இந்தச் சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கைதுசெய்தவர்களில் ஒருவர், மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, கசிப்பு உற்பத்திக்கான உபகரணங்களை வைத்திருந்த குற்றத்துக்காக 50,000 ரூபா பிணையில், நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.கணேசராஜா விடுதலை செய்தார். ஏனைய சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (உ)

## காஷ்மீரில் நிலநடுக்கம்

ஜம்மு-காஷ்மீரில் பண்டி போராவின் சிம்கோல் பகுதியில் இன்று அதிகாலை லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த அதிர்வு ரிக்டர் அளவில் 4.5 ஆகப் பதிவானது.
காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதியில் இன்று காலை 5.44 மணிக்கு இலேசான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 4.5 ஆகப் பதிவானது. பண்டி போராவின் சிம்கோல் பகுதியை மையமாக வைத்து இந்த நில நடுக்கம் உருவாகியுள்ளது. கட்டடங்கள், வீடுகள் இலேசாக குலுங்கியமையால், மக்கள் பயத்தினால் வெளியே ஓடிய மையால் சேதங்கள் இன்றித் தப்பித்தனர். (உ)

## தங்க நகைகளுடன் இருவர் கைது!



சென்னை விமான நிலையத்தில் 35 இலட்சம் மதிப்புள்ள தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பாக 2 பேர் கைது செய்யப்பட்டனர்.
மும்பையில் இறங்க வேண்டிய விமானம் காலநிலை மோசமாக இருந்ததால் சென்னைக்குத் திருப்பி அனுப்பப்பட்டது அதில் இருந்து வந்த பயணிகளைச் சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்த போதே நகைகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஹொங்கொங் மற்றும் மஸ்கட்டில் இருந்து வந்த விமானங்களைச் சோதனை செய்தபோது ஜிக்னேஷ் சாந்திலால்,ஷேக்தாவூத் முகமது ஆகியோரிடமிருந்து 35 இலட்சம் மதிப்புள்ள தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன.
இருவரும் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இருவரிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (உ)



# பிரதமர் மோடியின் சொத்து ஒரு கோடியே 13,403

பிரதமர் மோடி தன்னிடம், ஒரு கோடியே 13 ஆயிரத்து 403 ரூபா மதிப்பிலான சொத்துகள் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.
மத்திய மந்திரிகள்அனைவரும் தங்களது சொத்துப்பட்டியலை ஒகஸ்ட் 31 ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் எனப் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். அதன்படி, மோடி தனது சொத்துப் பட்டியலை வெளியிட்டுள்ளார், அவருக்கு ஒரு கோடியே 13 ஆயிரத்து 403 ரூபா மதிப்பிலான சொத்துகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.2015 - 16 நிதி ஆண்டில் அவரது மொத்த இருப்பு 89 ஆயிரத்து 700 ரூபா ஆகும்.
ஆனால் 2016 - 17 நிதி ஆண்டில் மொத்தக் கையிருப்பு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாகும். நிதி மந்திரி அருண் ஜெட்லி, வெளியுறவு மந்திரி சுஷ்மா சுவராஜ், மனிதவள மேம்பாட்டுத் துறை மந்திரி பிரகாஷ் ஜவடேகர், சிறுபான்மையினர் நலத்துறை மந்திரி முக்தர் அப்பாஸ் நக்வி போன்ற 15 மந்திரிகள் மட்டும் தங்களது சொத்துப் பட்டியலைத் தாக்கல் செய்துள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.
மத்திய உள்துறை மந்திரி ராஜ்நாத் சிங், சட்ட மந்திரி ரவிசங்கர் பிரசாத், ரயில்வே மந்திரி பியூஷ் கோயல், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை மந்திரி மேனகா காந்தி, ஜவுளி மற்றும் தகவல், ஒலிபரப்புத்துறை மந்திரி ஸ்மிரிதி இரானி உள்ளிட்டவர்கள் தங்களது சொத்து பட்டியலை தாக்கல் செய்யவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ)




இந்தோனேசியாவின் பாலி தீவில் உள்ள எரிமலை எப்போது வேண்டுமானாலும் வெடிக்கலாம் என்பதால் அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள 10,000 பேர் இதுவரை வெளியேற்றப்பட்டுள்ளனர்.இந்தோனேசியாவில் 130இற்கும் அதிகமான எரிமலைகள் உள்ளன. அதில் ஒரு எரிமலை பாலி தீவில் உள்ள மவுண்ட் ஆகுங் என்னுமிடத்தில் உள்ளது. இந்த எரிமலையானது 50 ஆண்டுகளில் முதல் முறையாகத் தற்போது வெடிக்கவுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர். எரிமலை இருக்கும் ஒன்பது கிலோ மீற்றர் தூரம் வரை மக்கள் யாரும் இருக்கக் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அங்குள்ள கிராமங்களில் சிறிய அளவிலான நில அதிர்வுகளும் ஏற்பட்டுள்ளன. கிராம வாசி ஒருவர் கூறுகையில், "எரிமலை வெடிக்கும் என எச்சரிக்கப்பட்ட காரணத்தால் எங்கள் குடும்பம் இங்கிருந்து வெளியேறி, குடியிருப்பு முகாமில் தங்கியுள்ளது" எனக் கூறினார். பாலியில் உள்ள சர்வதேச விமான நிலையம் அதிகளவிலான சுற்றுலாப் பயணிகளால் பயன்படுத்தப்படும் நிலையில், தற்போதும் தடையின்றி விமான சேவை தொடருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதுஏற்கனவே கடந்த 1963இல் இந்தோனேசியாவில் உள்ள ஒரு எரிமலை வெடித்ததில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தாகும். (உ)



## எடை குறைக்க முயன்ற பெண் உயிரிழப்பு

திருவண்ணாமலை மாவட்டத்தில் உடல் எடையைக் குறைப்பதற்காக அறுவை சிகிச்சை செய்துகொண்ட பெண் உயிரிழந்துள்ளார்.
வளர்மதி(46) என்பவர் 150 கிலோ எடையை குறைக்க ஒகஸ்ட் 23ஆம் திகதி கீழ்ப் பாக்கம் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இதற்கு முன்னர் வளர்மதிக்கு 8 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டது. இந்நிலையில் நேற்று நடந்த 9 ஆவது அறுவை சிகிச்சைக்குப் பின் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.
காய்ச்சலால் பாதிக்கப்பட்ட வளர்மதி சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்தார்.
மருத்துவர்களின் தவறான சிகிச்சையால் தனது மனைவி உயிரிழந்துவிட்டார் என அவரது கணவர் மற்றும் உறவினர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.
மேலும், வளர்மதியின் கணவர் அழகேசன் அளித்த புகாரின் அடிப்படையில் பொலிஸார் மருத்துவமனை நிர்வாகத்திடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### பாத்திரம் சுத்தம் செய்யும் பெண்:

## பேஷன் ஷோவில் வாய்ப்பு





அமெரிக்காவின் டெக்சாஸ் பகுதியில் உள்ள ஓர் உணவு விடுதியில் பாத்திரங்கள் சுத்தம் செய்யும் பணியில் சேர்ந்தார் ரெமிங்டன் வில்லியம்ஸ். 12 ஆவது நாளில் நியூயோர்க் பேஷன் வீக்கில் பங்கேற்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.
உடனே நியூயோர்க் சென்று, சர்வதேச மொடலிங் ஏஜென்சியின் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். ரெமிங்டனுக்குப் பயிற்சியளிக்கப்பட்டபோது பல்வேறு மொடலிங் நிறுவனங்கள் அவரை உற்று நோக்கின. இவரது திறமையைக் கண்டு ஆச்சரியமடைந்தன. கால்வின் க்லெய்ன் நிறுவனம் தன்னுடைய பிராண்ட் சார்பாக பேஷன் வீக்கில் பங்கேற்க வாய்ப்பு அளித்தது. மொடலிங் பற்றி ஒன்றும் தெரியாத எனக்கு வாய்ப்பு கிடைத்ததில் இன்றுவரை ஆச்சரியமாக இருக்கிறது. ராஃப் சிமோன்ஸ் என்மீது மிகுந்த நம்பிக்கை வைத்து எப்படி நடக்க வேண்டும், எப்படி உடை அணிய வேண்டும், எப்படிப் பேச வேண்டும் என்று ஒவ்வொன்றையும் அழகாகச் சொல்லிக் கொடுத்தார். அவர் என்மீது நம்பிக்கை வைத்து வாய்ப்புக் கொடுத்ததால், நானும் முழுமையாக ஈடுபாடு காட்டினேன். பேஷன் வீக் முடியும் நேரத்தில் மார்க் ஜேகப்ஸ் நிறுவனத்துக்காக பேஷன் ஷோவில் பங்கேற்கச் சொல்லி அழைப்பு வந்தது. என் வாழ்க்கையில் அடுத்தடுத்து நிகழும் அதிசயங்களைக் கண்டு நான் ஆச்சரியத்தில் உறைந்து போயிருக்கிறேன்" என்று கூறியுள்ளார். (உ)

# துருக்கிக் கடலில் படகு கவிழ்ந்து 15 சாவு!




உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டுள்ள சிரியா, ஈராக், ஏமன் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் தேடி ஆபத்தான முறையில் படகுகளில் பயணம் செய்கின்றனர். இதனால், மத்தியதரைக் கடல், கருங்கடல் பகுதிகளில் படகுகள் மூழ்கி அகதிகள் பலியாவது தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இந்த நிலையில், துருக்கி அருகே கருங்கடலில் அகதிகள் சென்ற படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. ரோமானியாவை நோக்கி அந்தப் படகு சென்றிருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. 70 பேர் பயணித்த படகு மூழ்கியதில் 15 பேர் பலியாகினர். 40 பேர் துருக்கிக் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.
மீதமுள்ளவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருவதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.
கடந்த 2015ஆம் ஆண்டில் மட்டும், 10 லட்சம் அகதிகள் ஆபத்தான முறையில் கடல் பயணம் மேற்கொண்டுள்ளதாகவும், அப்போது ஏற்பட்ட விபத்துகளில் சிக்கி ஆயிரக்கணக்கானோர் கடலில் மூழ்கிப் பலியாகினர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (உ)

# அடுத்த அக்ஷன்

'ஈரம்', 'வல்லினம்', 'ஆறாது சினம்', 'குற்றம் 23' ஆகிய படங்களை இயக்கிய அறிவழகன் இயக்க விருக்கும் புதிய படத்தில் நயன்தாரா நடிக்கவுள்ளார்.

சங்கர் தயாரித்த 'ஈரம்' படம் மூலம் இயக்குந ராக அறிமுகமானவர் அறிவழகன். இந்தப்படத் தின் வெற்றியைத் தொடர்ந்து 'வல்லினம்', 'ஆறாது சினம்' ஆகிய படங்களை இயக்கினார். இதைய டுத்து சமீபத்தில் 'குற்றம் 23' படத்தை இயக்கினார். இந்தப்படம் ரசிகர்களிடையே நல்ல வரவேற் புப் பெற்று அதிக வசூலை அள்ளிக் கொடுத்தது.

இவர் அடுத்ததாக, நாயகிக்கு முக்கியத்துவம் உள்ள படத்தை இயக்கவுள்ளார். நாயகியாக நயன்தாரா நடிக்கவிருக்கிறார். இதில் நடிக்கும் மற்ற நடிகர்களின் தேர்வு நடைபெற்று வருகிறது.

இப் படத்தை எஸ்.பி.சினிமாஸ் நிறுவனம் தயாரிக்கவிருக்கிறது.

நயன்தாரா நடிப்பில் 'அறம்' படம் விரைவில் வெளியாகவுள்ளது. சிவகார்த்திகேயனுடன் நடித்துள்ள 'வேலைக்காரன்' டிசெம்பர் மாதம் வெளியாகவுள்ளது. 'இமைக்கா நொடிகள்', 'கொலையுதிர் காலம்', 'கோலமாவு கோகிலா' ஆகிய படங்களில் அவர் நடித்து வருகிறார் என் பது குறிப்பிடத்தக்கது. (ஒ)



# புலம்பல்!




இந்தியாவுக்கு எதிரான 2ஆவது ஒரு நாள் போட்டியில் தோல்வியடைந் தமை குறித்துப் புலம்பித் தள்ளியுள் ளார் ஆஸ்திரேலிய அணியின் தலை வர் ஸ்டீவன் சுமித்.

இது குறித்து அவர் கூறுகையில், "எங்களது துடுப்பாட்ட வீரர்க ளால் நெருக்கடியைத் திறம்படச் சமாளிக்க முடியாமல் நிலை குலைந்துவிட்டனர்.

நேர்மையாகச் சொல்ல வேண்டும் என்றால், ஒரு நாள் போட்டி மாத் திரமல்ல, எல்லா வகைக் கிரிக்கெட் டிலும் நெருக்கடியான கட்டத்தில் ஆஸ்திரேலிய அணி விக்கெட்டுகளை மளமளவென இழந்து நிலைகுலைந்து விடும் போக்குச் சமீபகாலமாக அடிக் கடி நடக்கிறது. இதைத் தடுத்து நிறுத்த வேண்டியது அவசியமாகும்.

ஆஸ்திரேலிய வீரர்கள் உண்மையி லேயே கடுமையான பயிற்சி மேற்கொள் கிறார்கள். அதைக் களத்திலும் காண் பிக்க வேண்டும். நெருக்கடியான சூழ் நிலை வரும்போது, பயந்து விடா மல் தங்களது திட்டமிடலைக் கன கச்சிதமாகச் செயல்படுத்த வேண் டும். இந்த ஆட்டத்தைப் பொறுத்த வரை நல்ல இணைப்பாட்டம் கிடைக்கவில்லை.

இந்தியப் பந்து வீச்சைக் கண்டு ஆஸ்திரேலிய வீரர்கள் அச்சத்துக் குள்ளாகிறார்களா? என்று கேட்கி றீர்கள். அந்த மாதிரி எல்லாம் இல்லை. ஆனால் கடந்த ஆட்டத்தில் கொஞ் சம் பயந்து விட்டார்கள் என்று நினைத் தேன். பந்து எந்த மாதிரி வருகிறது என்பதை மிகவும் கூர்ந்து கவனிக்க முயற்சிப்பதால், தங்களது இயல் பான ஆட்டத்தை வெளிப்படுத்த மறந்து விடுகிறார்கள்." என்றார்.(ஐ)

## வெளியாகி அடுத்த நாளே ஒஸ்கார்

ஹிந்திப் பட இயக்குநர் அமித் மசூர்கர் இயக்கிய 'நியூட்டன்' திரைப்படம் நேற்று வெளியானது. இந்தப் படத்தில் நடிகர்கள் ராஜ்குமார் ராவ், பங்கஜ் திரிபாதி, ரகுபிர் யாதவ், நடிகை அஞ்சலி பட்டேல் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். அரசியலை மையமாக வைத்து எடுக்கப்பட்ட இந்தப் படத்தில் நேர்மையான தேர்தல் அதிகாரி தேர்தலை நடத்துவதில் ஏற்படும் சிரமத்தைப் பற்றிப் கூறியிருக்கின்றனர்.

இந்தநிலையில் இந்தியத் திரைப்படக் கூட்டமைப்புக் கூட்டம் மும்பையில் நேற்று நடந்தது. இந்தக் கூட்டத்தில், 2018ஆம் ஆண்டுக்கான ஒஸ்கார் விருதுக்கு 'நியூட்டன்' படம் ஒருமனதாகப் பரிந்துரை



செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து இயக்குநர் அமித் மசூர்கர் கூறுகையில், "என்னுடைய படம் வெளியான அன்றே ஒஸ்கார் விருதுக்குப் பரிந்துரை செய்யப்பட் டமை இரட்டிப்பு மகிழ்ச்சியளிக்கி றது" என்றார். (ஒ)

# இன்றைய போட்டிகள்

இளவாலை வருத்தப்பட்டாத வாலி பர் சங்கம் நடத்திருவம் கரப்பந்தாட் டத் தொடரில் இன்று இரவு 3 போட்டி கள் நடைபெறவுள்ளன.

இதில், இரவு 7 மணிக்கு ஆரம்பிக்கும் முதலாவது போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழ கத்தை எதிர்த்துப் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் மேதவுள்ளது.

இதில் வெற்றி பெறும் அணி இரவு 9.30 மணிக்கு புத்தூர் கலைமதி விளை யாட்டுக் கழகத்துடன் அரையிறுதியில் மோதும்.

இதற்கிடையில் இரவு 8.15 மணிக்கு நடைபெறும் முதலாவது அரையிறுதி யில் ஆவரங்கால் மத்திய விளையாட் டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழகம் மோத வுள்ளது.

இதன் இறுதியாட்டம் நாளை நடைபெறவுள்ளது.

************************

அரியாலை சரஸ்வதி சன சமூக நிலை யம் நடத்தி வரும் 'யாழின் கில்லாடி யார்?' உதைபந்தாட்டத் தொடரின் இரண்டாம் சுற்றின் கடைசிப் போட்டி ஒன்று இன்று இரவு 8 மணிக்கு நடை பெறவுள்ளது.

இதில், இளவாலை சென்லூட்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை கலைவாணி விளையாட் டுக் கழகம் மோதவுள்ளது.

இந்தப் போட்டியில் வெற்றிபெறும் விளையாட்டுக் கழகம் நாளை நடை பெறும் காலிறுதிப் போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்துடன் மோதவுள்ளது.

************************

திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் வடமாகாண ரீதியிலான உதைப்பந்தாட்டத் தொட ரின் லீக் போட்டிகள் இன்று ஆரம்பிக் கின்றன.

இதன் முதல் போட்டி இரவு 7 மணிக்கு நடைபெறும். இதில் ஐயனார் விளை யாட்டுக் கழகத்தை எதிர்த்து கரண வாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. இரண்டாவது போட்டி இரவு 8 மணிக்கு நடைபெறும். இதில், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட் டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம் பன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ஐ)

# மணற்காடு சென். அன்ரனிஸ் தொடர்: செல்சிற்றி, வல்வைக் கழகங்கள் வெற்றி







மணற்காடு சென். அன்ரனிஸ் விளை யாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட் டத் தொடரில், நேற்று நடைபெற்ற ஆட் டங்களில் கிராஞ்சி செல்சிற்றி மற்றும் வல்வை கழகங்கள் வெற்றிபெற்றன.

சுனாமியால் இறந்தவர்களினதும் கழ கத்தின் மறைந்த வீரர்களினதும் நினை வான மணற்காடு சென். அன்ரனிஸ் விளை யாட்டுக் கழகம் உதைபந்தாட்டத் தொடரை நடத்தி வருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் கிராஞ்சி செல்சிற்றி விளையாட் டுக் கழகத்தை எதிர்த்து அன்னை விளை யாட்டுக் கழகம் மோதியது. இந்த ஆட் டத்தில் கிராஞ்சி செல்சிற்றி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. கிராஞ்சி செல்சிற்றி சார்பாக கோல் போட்ட சுதர் சன் ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட் டார்.

பின்னர் நடைபெற்ற இரண்டாவது போட் டியில் சுப்பராயன் முல்லை விளையாட் டுக் கழகத்தை எதிர்த்து வல்வை விளை யாட்டுக் கழகம் மோதியது. இதில் வல்வை, 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. வல்வை அணி சார்பாக கோல் போட்ட சீலன் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். (ஐ)

# இன்றைய கருத்தோவியம்






கெருடாவில் தெற்கு நற்பணி மன்றத்தின் கட்டடத் திறப்புவிழா இன்று நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்தார். அவரது 2 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின்கீழ் குறித்த கட்டட நிர்மாணப் பணிகள் இடம்பெற்றிருந்தன.(11)

## ஏ.ரி.எம். திருடி கைது

தன்னியக்க இயந்திர (ஏ.டி.எம்.) அட்டையை திருடி அதில் பொருட்களைக் கொள்வனவு செய்ததுடன், பணத்தையும் எடுத்திருந்த, பெண்ணொருவரைக் ஹட்டன் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். ஹட்டன் பிரதேசத்தைச் சேர்ந்த, 46 வயதான பெண்ணையே, நேற்று மாலை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அந்த அட் டையை (காட்) பயன்படுத்தி குறித்த பெண், 80 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்ததுள்ளதுடன், 30 ஆயிரத்து 790 ரூபாவுக்கு, ஆடைகளை கொள்வனவு செய்துள்ளார். வங்கியிலிருந்து பணத்தை மீள எடுக்கும் போதும், ஆடைகளை கொள்வனவு செய்யும்போது, சி.சி.டி.வி கமெராவில் பதிவாகியிருந்த காட்சிகளை அடிப்படையாகக்கொண்டே, சந்தேகநபரான அப்பெண்ணை கைதுசெய்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர். (உ)

## உலக வங்கி பாராட்டு



இலங்கை அடிப்படை விடயங்கள் பலவற்றில் அடைந்த முன்னேற்றம் குறித்து உலக வங்கி பாராட்டு தெரிவித்துள்ளது.
உலக வங்கியைச் சேர்ந்த திருமதி அபர்ணா அம்மையார் நேற்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவை சந்தித்தார். சுகாதாரம், கல்வி மற்றும் எழுத்தறிவு போன்ற விடயங்களில்இலங்கை அதிக முன்னேற்றத்தை காண்பித்திருப்பதாகக் குறிப்பிட்ட அவர் நிலைபேறான அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களில் அரசாங்கம் வழங்கிய வழங்கல் மற்றும் பங்களிப்பு தொடர்பில் பேச்சில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. காலநிலை மாற்றம் மற்றும் அனர்த்த நிலைமைகளை குறைப்பதற்கு இலங்கை அரசாங்கத்துடன் மிக நெருங்கிய வகையில் செயற்படுவதற்கு உலக வங்கி தயாராக இருப்பதாகவும் திருமதி அபர்ணா இந்த சந்திப்பின் போது மேலும் தெரிவித்தார். (உ)

## தனியார் வைத்தியசாலை கட்டணம் ஒழுங்குபடுத்தப்படும்

சகல தனியார் வைத்தியசாலைகளுக்கும் சிகிச்சைகளுக்கான உரிய கட்டணங்களும் ஒழுங்குபடுத்தப் படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள சுகாதார போஷாக்க மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித்த சேனாரத்ன அரச, தனியார் வைத்தியசாலைகளை இணைத்துச் சிறந்த சுகாதார சேவை ஏற்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார். ஏற்றுமதி - இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான கட்டளையும், தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் கீழான இரண்டு கட்டளையும் நாடாளுமன்றத்தில் நேற்று விவாதிக்கப்பட்டன.
இதுதொடர்பான விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் ராஜித்த சேனாரத்ன மருத்துவ சேவைக்குத் தேவையான வசதிகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது. சைட்டம் மருத்துவக் கல்லூரி சர்வதேச தரம் வாய்ந்த மருத்துவப் பட்டத்தை பெற்றுக்கொள்ளும் வகையில் அபிவிருத்தி செய்யப்பட இருக்கின்றது. இது தொடர்பான பேச்சுவார்த்தை எதிர்வரும் வியாழக்கிழமை இலங்கை மருத்துவப் பேரவையின் அதிகாரிகளுடன் இடம் பெறவிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (உ)

## ஊடகவியலாளர் அஸ்வின் சுதர்சன் நினைவு நிகழ்வும் நூல் வெளியீடும்



காட்டூன் ஊடகவியலாளர் அமரர் அஸ்வின் சுதர்சன் நினைவு நிகழ்வும் நூல் வெளியீடும் நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.நாச்சிமார் கோயில் வீதியில் அமைந்துள்ள ஹம்சியா மஹால் ( ராஜா கிறீம் ஹவுஸ் ) மண்டபத்தில் நடைபெற உள்ளது. கோப்பாய் ஆசிரியர் பயற்சிக் கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெறவுள்ளது. அஸ்வினின் நண்பர்கள் இணைந்து "கோடுகளால் பேசியவன்" எனும் நூலை வெளியிடுகின்றனர்.
அஸ்வின் பற்றிய நினைவுகள், அவர் வரைந்த காட்டூன்கள் யாவும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன. (உ)

## குத்துச் சண்டையில் முல்லைக்கு வெற்றி



பாடசாலைகளுக்கிடையிலான குத்துச்சண்டைப் போட்டியில் பிரபல்யமிக்க ரி.பி ஜயா குத்துச் சண்டை வெற்றிக்கிண்ணத்தை முல்லைத்தீவு வித்தியானந்த தேசிய பாடசாலை அணி கைப் பற்றியுள்ளது.
இலங்கை குத்துச்சண்டை சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த போட்டி முல்லைத்தீவு வித்தியானந்த தேசிய பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. முல்லைத்தீவு வித்தியானந்த தேசிய பாடசாலை அணி வீரர்கள் இந்தப் போட்டியில் நான்கு தங்கப்பதக்கங்களைப் பெற்று இந்த வெற்றியைப் பெற்றனர். 13-14 15-16 17-18 என்ற வயது பிரிவுகளில் நடைபெற்ற போட்டிகளில் 44 அணிகளில் சுமார் 200 வீரர்கள் கலந்துகொண்டனர். (உ)

## வீதிச் சட்டதிட்ட விசேட செயற்றிட்டம்

வீதிச் சட்ட திட்டங்களை மீறுகின்ற, சாரதிகளை கைதுசெய்வதற்கான விசேட செயற்றிட்டம், பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் தலைமையில், தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்றிட்டம், தாமரைத் தடாகத்துக்கு அண்மையிலேயே இன்றுக் காலை 9.15க்கு ஆரம்பிக்கப்பட்டது என்று பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று ஆரம்பிக்கப்பட்ட இந்தச் செயற்றிட்டம், ஒருவார காலத்துக்கு முன்னெடுக்கப்படும் என்றும் அத்திணைக்களம் அறிவித்துள்ளது. (உ)




நவராத்திரி தினத்தை முன்னிட்டு யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று வாணி விழா நிகழ்வு நடைபெற்றது.

## நாளை நாளும் கோளும்

24.09.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 08 ஆம் நாள்

சதுர்த்தி பி.ப. 01.06 வரை | விசாகம் பி.இ. 05.36 வரை | மரணயோகம்


இராகுகாலம் 04.32 - 06.02 | சுபநேரம் 09.02 - 10.32 | எமகண்டம் 12.02 - 01.32

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொறுமை | இழப்பு | நட்டம் | செலவு | மறதி | இரக்கம் | நன்மை | அமைதி | நற்செயல் | போட்டி | நன்மை | நட்பு |

எதிரொலி
Ethiroli

# வானம் பார்த்த வகுப்பறை

வவுனியா வடக்கு வலயத்துக்குட்பட்ட புளியங்குளம் ஆரம்ப பாடசாலையின் இணைப்பாட விதானச் செயற்பாட்டுக்கான கொட்டகை சிதைவடைந்து மாணவர்களால் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது. இப்பாடசாலை புளியங்குளம் இந்துக் கல்லூரியில் இருந்து பிரிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. தரம் 1 முதல் 5 வரையிலான இப் பாடசாலையில் தற்போது 135 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். ஒரு கட்டடத்தில் சிறியதாக பிரிக்கப்பட்ட 5 வகுப்பறைகளை மாத்திரம் கொண்டதாகக் காணப்படும் இப் பாடசாலையில் மாணவர்களின் இணைப்பாட விதானச் செயற்பாடுகள், மாணவர் மன்றம் உள்ளிட்ட தேவைகளுக்காக ஒரு கொட்டகை அமைக்கப்பட்டிருந்தது. அது வேயப்படாது ஓட்டைகள் நிறைந்ததாக காற்றில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. மாணவர்கள் இணைப்பாட விதானச் செயற்பாட்டுக்காக அக் கொட்டகைக்குள் வருகின்றபோது அக் கொட்டகைக்குள் இருந்து வானத்தைப் பார்க்கக் கூடியதாக இருப்பதாகவும், மழை மற்றும் வெயில் என்பவற்றுக்கு மத்தியிலேயே தமது இணைப்பாட விதானச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர். (உ)



## அந்த நாள் ஞாபகம்.....!



**1986.09.23**

இலங்கை கொழும்பில் தேசிய இயற்கை வரலாற்று நூதன சாலை பொதுமக்களுக்குத் திறந்துவிடப்பட்டது.

## மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண்ணொருவர் உயிரிழப்பு

கடவத்தை, தலுபிட்டியப் பிரதேசத்தில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

வீதியின் குறுக்காக சென்று கொண்டிருந்த பெண்ணின் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் படுகாயமடைந்த பெண் ராகம வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த போது உயிரிழந்துள்ளார். மஹர, கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கடவத்தைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (உ)

## 3 மாடிக் கட்டடத்தில் தீ விபத்து

கொழும்பு, பொரளை, சீவலிப் பகுதியிலுள்ள 3 மாடிக் கட்டடத்தொகுதி ஒன்றின் முதல் மாடியில் இன்று காலை திடீரென தீ பரவியுள்ளது. பொலிஸாருக்கும் தீயணைப்பு பிரிவினருக்கும் வழங்கப்பட்ட தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புக் குழுவினர் மின்சார சபையினரின் உதவியோடு முதலாம் மாடியில் பரவிய தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். குறித்த சம்பவத்தில் இதுவரை எதுவித உயிர் ஆபத்துக்களும் இல்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர். தீ பரவலுக்கான காரணம் இது வரை கண்டறியப்படாத நிலையில் பொரளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## 50 அடி பள்ளத்துள் பாய்ந்தது முச்சக்கரவண்டி



நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 50 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்துள்ளனர். ஹட்டன் நகரத்திலிருந்து மஸ்கெலியாவுக்குச் சென்று கொண்டிருந்த குறித்த முச்சக்கர வண்டி இன்று காலை ஹட்டன் - மஸ்கெலியா பிரதான வீதியில் நோர்வூட் நிவ்வெளி பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. முச்சக்கரவண்டியின் வேகக் கட்டுப்பாட்டை கட்டுப்படுத்த முடியாததன் காரணமாகவே இந்த விபத்து நேர்ந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொள்ளும் பொலிஸார் தெரிவித்தனர். காயமடைந்த மூவரும் கண்டி டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (உ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**யாழில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டனர். அதனையடுத்து அவர்களுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அவர்களது சாரதிஅனுமதிப்பத்திரங்களை 6 மாதங்களுக்குத் தடுத்து வைக்குமாறும் பதில் நீதிவான் க. அரியநாயகம் கட்டளையிட்டார். (உ)

**தண்டிக்கும்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பிலான பட்டியலை உதவி ஆணையாளர் அண்ட்ரூ கில்மோ நேற்று மாலை வெளியிட்டுள்ளார். இந்தியாவுக்கும் இந்தக் குற்றச்சாட்டு எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

**இடைக்கால...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரிசனைகளை முன்வைத்தது.

புதிய அரசியலமைப்பு உருவக்கத்தில் பிரதான அறிக்கையே கவனத்தில் எடுக்கப்பட வேண்டுமென்று பேச்சு வார்த்தைகளில் இணக்கம் காணப்பட்டிருக்கின்றது. எனவே பிரதான அறிக்கை முன்னேற்றகரமானதாகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் பார்க்கப்படுகின்றது. ஆனால் பிரதான அறிக்கைக்கு இணக்கம் தெரிவித்த கட்சிகள் பின்னர் அதிலிருந்து பின்வாங்குவதைப் போன்ற கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றன. அது நிச்சயமாக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் கரிசனைக்குரிய விடயமாகப் பார்க்கப்படுகின்றது - என்றார். (எ)

**அம்பாந்தோட்டை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கூட்டு முயற்சி வெற்றி பெறுவதற்கு உள்ளூர் முதலீட்டாளர்களும் எம்முடன் இணைந்து கொள்ள வேண்டும். இலங்கையின் கடல்சார் தொழில்துறை மற்றும் பொருளாதார மாற்றங்களில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு முக்கியமான பங்காற்றும் வாய்ப்பு இருப்பதாக நாம் நம்புகிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

**அவசரப்பட்டால்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்றிய முன்மொழிவில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை முழுமைப்படுத்துவதற்கு இரண்டு வருட காலம் தமது நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றார். இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்களை நேரில் கண்டறிவதற்காக அடுத்த வருடம் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறும் ஆணையாளருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

இந்த நிலையில் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து ஆணையாளருக்கு விளக்கிய ஜனாதிபதி இந்த அனைத்து நடவடிக்கைகளையும் நாட்டின் உள்ளக அரசியல் நிலவரங்களையும் சர்வதேச அரசியல் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டே முன்னெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

காணாமல்போனோர் அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலில் இந்த விஜயத்திற்கு முன்னர் தான் கையொப்பமிட்டதாகவும், அதன் நடவடிக்கைகள் செயற்திறனாக முன்னெடுக்கப்படும் என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி புதிய அரசியலமைப்பு தொடர்பான உத்தேச வரைபை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். பாதுகாப்பு படையினர் வசமுள்ள கிழக்கு மாகாணத்தின் அனைத்து காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி வடக்கில் உள்ள காணிகளில் குறிப்பிடத்தக்களவு விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், எஞ்சியவை நிர்வாக ரீதியான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு முறையாக மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். (எ)

**ரணிலின்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளமை அதிர்ச்சியும் ஏமாற்றமும் அளிக்கிறது என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். ரணிலின் கருத்துத் தொடர்பில் கிளிநொச்சி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் அமைப்பின் இணைப்பாளர் கலாரஞ்சனி குறிப்பிட்டபோது, யுத்த காலத்திலும் யுத்தம் நிறைவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னரும், அதாவது 2009 க்கு முன்னரும், 2009 மற்றும் அதற்கு பின்னராகவும் ஒரிரு ஆண்டுகளிலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களே இலங்கையில் உள்ளனர். எனவே அவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரியே தாம் தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம் எனவும் காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகள் எந்தக் காலப்பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டாகளோ அந்தக் காலத்திற்கு இந்தச் சட்டம் செல்லுபடியாகாது என்றால் காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளின் நிலை என்ன எனவும் அவர்களுக்கான நீதி எப்படி கிடைக்கும்? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (உ)

## இலங்கையில் முதலிட ஆந்திர அரசு ஆர்வம்

இந்தியாவின் ஆந்திரப் பிரதேச மாநில அரசாங்கம் இலங்கையில் கைத்தொழில் நடைக்கூடம் ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பாக, ஆந்திர மாநில கைத்தொழில் அமைச்சர் அமர்நாத் ரெட்டி இலங்கை அரசாங்கத்துடன் ஏற்கனவே பேச்சுக்களை நடத்தியுள்ளார். அடுத்த சில வாரங்களில் இலங்கை அரசாங்கத்துடன் இது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்படும் என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. கடல்வழிப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இலங்கைக் கலுணவு, மருந்து மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கு ஆந்திர மாநிலத்துக்கு சிறந்த இடமாக உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதற்காக ஆந்திர மாநில அரசாங்கத்துக்கு யாழ்ப்பாணம் அல்லது திருகோணமலையில் இலங்கை அரசாங்கம் நிலங்களை ஒதுக்கிக் கொடுக்கலாம் என்றும் கூறப்படுகிறது. அதேவேளை, பரஸ்பர வர்த்தக உடன்பாட்டின் மூலம், ஆந்திரப் பிரதேசத்தில், ஆடை மற்றும் விமானப் பயணத் துறைகளில் இலங்கை அரசாங்கம் முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது. (எ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 23.09.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.